# திருமறைத்தீபம்




THE BIBLE LAMP

மலர் 2 ஜனவரி - மார்ச் 1996 இதழ் 1


## அறிவிப்பு

இவ்விதழில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நூல்கள் பற்றிய விபரங்களைத் தந்துதவிய சென்னை, தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள் நிறுவனத்திற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம் இடமின்மையால் இவ்விதழில் வெளிவரவில்லை. வரப்போகும் இதழில் அது தொடர்ந்து வளரும்.

## இந்த இதழில்


- கற்பவை கசடறக் கற்க
- திருச்சபை
- கிருபையின் . . .
- திருமறைக்கல்வி
- கற்றனைத்து ஊறும் . .
- வாசிக்காமல் . . .
- வாசிப்பது எப்படி ?
- நல்ல நூல்களைத் . .
- திருமறை ஒரு . . .
- தமிழில் உள்ள . .
- நூல் அறிமுகம்


# கற்பவை கசடறக் கற்க . . !

அன்புள்ள வாசகர்களே,

'கற்பவை கசடறக் கற்க' என்பது பெரியோர் வாக்கு. எதைப்படித்தாலும் அதை முறையாக, உண்மைப் பொருள் அறிந்து படிக்க வேண்டும் என்பது இதன் பொருள். வேதத்தைப் பொறுத்தவரை இது எத்தனை உண்மை. வேதத்தின் மெய்ப்பொருளை அறியாமல் தவறாகப் புரிந்து கொண்டால் அது கிறிஸ்தவ அறிவில் வளர உதவாது. தேவன் தம்மைக்குறித்தும், நாம் வாழ வேண்டிய வழிமுறைகள் குறித்தும் வேதத்தில் மட்டுமே எழுத்துருவில் அளித்திருப்பதால் அதைக் கசடறக் கற்பது அவசியம். கர்த்தருடைய துணையோடும், ஆவியின் உதவியோடும் நாம் வேதம் போதிக்கும் உண்மைகளை அறிந்து கொள்ள முடியும். இருந்தபோதும், வேத அறிவில் நாம் வளரத் துணை செய்யும் பொருட்டு கர்த்தர் நமக்கு நல்ல நூல்களையும் தந்துள்ளார். கற்றறிந்த நல்லறிஞர்களை எழுப்பி திருமறையில் அவர்களுக்கு நல்ல ஞானத்தைத் தந்து, அவர்கள் மூலம் நாம் வேத அறிவில் வளரத்துணை செய்யும் நல்ல நூல்களைத் தந்துள்ளார். திருமறைக் கல்விக்குத் துணை செய்யும் அத்தகைய நூல்களை நாம் தேடிப் பெற்றுப் பயனடைய வேண்டும்.


நமது துர்பாக்கியம், அத்தகைய நூல்கள் ஆங்கிலத்தில் அநேகம். இருந்தாலும் வல்ல தேவன் நமது தேவை அறிந்து ஆங்கிலத்தில் உள்ள நல்லறிஞர்களின் நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். அநேகக் குப்பைகள் தமிழிலே எழுத்துருவில் மலையாகக் குவிந்து புத்தகக் கடைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இந்நாட்களில், விடி வெள்ளிபோல் ஒளிவீசும் பலநூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அநேகர் இவை இருப்பதும் தெரியாமல் இருக்கிறார்கள். வாசகர்களுக்கு அத்தகைய நூல்களை அறிமுகப்படுத்துவதோடு, வாசிப்பின் மேன்மையையும் பலாபலன்களையும் எடுத்துக்காட்டுவது இவ்விதழின் சிறப்பம்சம். இது உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக அமையவேண்டுமென்பது எங்கள் இதயதாகம்.

மேலும் ஒரு புத்தம் புதிய வருடத்தைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். இப்புதிய வருடத்தில் அவர் மட்டுமே தரக்கூடிய ஆவிக்குரிய அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்று வாசகர்கள் வளர வேண்டும் என்பது திருமறைத்தீபத்தின் உளமார்ந்த வாஞ்சை. உங்கள் கடிதங்கள் எங்களை இவ்வூழியத்தில் ஊக்குவிக்கின்றன. தொடர்ந்து தேவன் விசுவாசமுள்ள கிறிஸ்தவ அன்பர்கள் மூலம் இவ்வூழியத்திற்கான பல தேவைகளையும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார். கர்த்தரை என்றென்றும் சேவிப்போம்.



அன்புடன்,
ஆசிரியர்

# கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை



பாகம் - 3

**கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச்சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப்படுத்துவதாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அதுபற்றித் திருமறை தரும் போதனைகளுக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் கேலிக்கூத்துகள் நடத்துபவர்களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இத்தொடர்கட்டுரை அலசுகிறது. - ஆசிரியர்.**

கடந்த இதழில் வேதம் திருச்சபையைக் குறித்து என்ன சொல்கிறது என்றும், திருச்சபை அங்கத்துவத்தின் அவசியத்தைக் குறித்தும் பார்த்தோம். இவ்விதழில் கர்த்தர் கட்டியெழுப்பும் அத்திருச்சபையின் ஊழியத்தைப்பற்றி ஆராய்வோம்.

## எங்கும் ஊழிய மயம்

திருச்சபை ஊழியம் மகிமையுள்ளது. அதன் மேன்மையைக்குறித்துப் பேசும்போது வேதம், 'சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே' (ரோமர் 10:15) என்று கூறுவதைப் பார்க்கிறோம். அத்தகைய மேன்மை வாய்ந்த ஊழியத்தின் மூலம் கர்த்தர் தன் சபையைக் கட்டியெழுப்புகிறார். திருச்சபை வளர்ச்சிக்கு தேவபயமுள்ள ஊழியக்காரர்கள் இன்று தேவையாக உள்ளனர். அதேவேளை திருமறைக்கு ஒவ்வாத ஒருவித 'ஊழியப்பிரேமை' பலரைப் பிடித்தாட்டி வைப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

### கிறிஸ்தவ ஸ்தாபனங்களும், ஊழியமும்

இன்று 'ஊழியம்' தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பானவிதத்தில் நடைமுறையில் எங்கும் காணப்படுகின்றது. 'ஊழியத்தை' தேவ பயத்தோடு திருமறையின் அடிப்படையில் புரிந்துகொள்ளாமல் சுய மகிமைக்காகப் பலரும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். முழு நேர ஊழியத்தை, மற்றவர்கள் மத்தியில் தங்களுக்குப் 'பிரஸ்டீஜ்' அளிக்கும் தொழிலாகப் பலரும் கருதுவதை இன்று நாம் நடைமுறையில்' பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. வேதம் ஊழியத்தைப்பற்றி என்ன சொல்கிறது என்றெல்லாம் சிந்திக்காமல் தாம் நினைத்தபடி மனம் போன போக்கில் 'ஊழியத்தில்' ஈடுபடுபவர்கள் பரந்து காணப்படுகிறார்கள். ஊழியம் செய்வது என்பது, புடவைக் கடையில் சேலை வாங்குவதைவிட இன்று இலகுவான காரியமாக இருக்கின்றது.

ஊழியத்தை தரக்குறைவான நிலைக்குக் கொண்டு வந்ததில் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது ஒரு ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்று, ஒருவன் புதிய கிறிஸ்தவனா, கிறிஸ்தவ வாழ்க்கையில் முதிர்ச்சி பெற்றுள்ளானா? என்றெல்லாம் ஆராயாமல் எதைச் செய்தாவது ஒருவன் ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோருடைய இதயத்திலும் இவர்கள் ஏற்படுத்துகிறார்கள். இக்கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் கைங்கரியத்தினால் வெளியில் உடல் வருத்தி வேலை செய்ய மனமில்லாதவர்களுக்கும், கிறிஸ்தவ வாழ்வில் அரிச்சுவடிகூட தேறாதவர்களுக்கும், ஊழியத்தையே தங்கள் வாழ்வில் நினைத்தும் பார்க்கத்தகுதியில்லாதவர்களுக்கும் 'ஊழியம்' இன்று சோறு போடுகிறது.

இன்று சிரிப்புக்கிடமான நிலையில் கர்த்தருடைய திருச்சபை ஊழியம் காணப்படுவதற்கு, இவர்கள் வேதம் ஊழியத்தைப்பற்றி என்ன சொல்கிறது என்று ஆராயமறுத்ததும், சுயநலமுமே காரணமாகும். கிறிஸ்தவர்கள் ஊழியத்திற்கு தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்கும் அதிசயமும், எந்தவொரு திருச்சபைக்குக் கட்டுப்படாமலும், அவற்றோடு தொடர்பில்லாமலும் பலர் கர்த்தருக்கு ஊழியம் செய்கிற அவலமும் இன்று வியாதியைப் போல் எங்கும் பரவியுள்ளது. வேதத்தைத் தெளிவாகப் படிக்கின்ற போது, திருச்சபை சம்பந்தமான எந்தவொரு ஊழியமும் சபையில் தோன்றி, சபையால் அங்கீகரிக்கப்பட்டு, சபை வளர்ச்சிக்காகப் பயன்பட வேண்டும் என்று பார்க்கிறோம். இன்று திருச்சபையையே தம் வாழ்வில் கண்ணால் கூடக்காணாமல் எங்கோவொரு வேதாகமக் கல்லூரியில் ஏதோவொரு பட்டத்தைப்பெற்றுக் கொண்டு வேடன் மானைத் தேடித்திரிவதுபோல் ஊழியத்தைத் தேடி அலையும் பேர்வழிகள்தான் எத்தனைபேர். கர்த்தரை அறிந்துகொண்டு சபை வாழ்க்கைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து, மூப்பர்களின்கீழ் வளராமல் வெறுமனே வேதாகமக் கல்லூரியொன்றில் பட்டம் பெற்றுவிடுவதால் ஒருவன் போதகனாகிவிட முடியாது. சபையில் வளராத ஒருவன் சபை நடத்தமுற்படுவது, மோட்டார் வாகனம் செய்வதெப்படி என்று புத்தகத்தில் மட்டும் படித்த ஒருவன் அதைச் செய்ய முற்படுவது போலாகும். ஏனெனில் 'பள்ளிக் கணக்கு எப்படி புள்ளிக்குதவாதோ' அதேபோல் வெறும் வேதாகமக் கல்லூரிப் படிப்பு மட்டும் சபை நடத்த உதவாது. ஒருவருடைய கிறிஸ்தவ வாழ்கையின் முதிர்ச்சியையும், கிறிஸ்தவ ஊழியத்திற்குத் தேவையான சகல தகுதிகளையும் சோதித்து அறியக்கூடிய பக்குவத்தைத் தேவன் திருச்சபைக்கு மட்டுமே அளித்துள்ளார் (எபேசியர் 4: 11-16).

இந்த 'ஊழியப்பித்து' இன்று நம்மைவிட்டு அகல வேண்டும். கிறிஸ்தவர்கள் எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தங்களுடைய தாலந்துகளையும், ஆவிக்குரிய வரங்களையும் சபைக்குக் கட்டுப்பட்டு சபையில் எல்லோரும் பயன்பெறப் பயன்படுத்த வேண்டும். சபையைவிட்டு ஓட முற்படாமலும், எங்கே தான் அதிகம் பயன்பட முடியும் என்று வாய்ப்புத் தேடி அலையாமலும் கர்த்தரின் வழிநடத்தலுக்குக் காத்திருக்க வேண்டும். தேவன் உண்மையிலே ஒருவனை ஊழியத்திற்கு அழைப்பாரானால் அதை சபை மூலமாகத் தெளிவாக விளக்குவார். பவுல் அப்போஸ்தலன் எப்படி சபைக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து, சபையின் அங்கீகாரத்தைப் பெற்று, சபை ஊழியங்களில் ஈடுபட்டானோ அதேபோல நாமும் செய்ய முற்பட வேண்டும். திருமறை அதிகாரபூர்வமானது, போதுமானது என்று நம்புகிறவர்கள் திருமறையின் திருச்சபை ஊழியங்கள் பற்றிய போதனைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

## விசுவாசிகளின் ஆசாரித்துவம் (The Priesthood of All Believers)


16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்திருத்தவாதிகள் கத்தோலிக்க மதத்திற்கெதிராகப் போர் தொடுத்த போது, அவர்கள் தீவிரமாகப் போதித்த ஒரு வேத சத்தியம் 'விசுவாசிகளின் ஆசாரித்துவமாகும்'. அதாவது கடவுளுக்கும் விசுவாசிகளுக்குமிடையில் இயேசு கிறிஸ்துவைத்தவிர வேறு எவருமே ஆசாரியர்களாக நியமிக்கப்படவில்லை. விசுவாசிகள் நேரடியாகவே தேவனிடத்தில் மன்றாட முடியும், தங்களது தேவைகளைக் கொண்டுவர முடியும் என்பது இதன் பொருள். பாப்பாண்டவரும், கத்தோலிக்க மதமும் இதை மறுத்துத் தமது சபை மூலமாகவே ஒருவன் தேவனிடத்தில் வரமுடியும் என்று போதித்தார்கள். 'விசுவாசிகளின் ஆசாரித்துவம்' இன்றைய சூழ்நிலையில் மறுபடியும் தெளிவாகப் போதிக்கப்பட வேண்டியதொரு பேருண்மை. இருந்தபோதும் சீர்திருத்தவாதகாலத்தில் புதுப்பிக்கப்பட்ட இச்சத்தியம் இக்காலங்களில் திரிபுபடுத்தப்பட்டு வித்தியாசமாக அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. அதாவது கடவுளுக்கும் விசுவாசிக்கும் இடையில் எவரும் ஆசாரியனாக வரக்கூடாது என்று வேதம் போதிக்கும்போது, இயேசு கிறிஸ்துவைத்தவிர வேறு எவரும் கடவுளை வெளிப்படுத்தக்கூடிய ஆசாரியத்துவச் செயலைச் செய்ய முடியாது என்ற உண்மையையே அது போதிக்கின்றது. இதைத் திரிபுபடுத்திச் சிலர், விசுவாசிகள் அனைவருமே ஆசாரியர்கள் ஆகவே, திருச்சபையில் அவர்கள் அனைவருமே எல்லா ஊழியத்திலும் ஈடுபட அதிகாரமுண்டு. அதை நிர்ணயிக்கும் அதிகாரம் தேவனுக்கு மட்டுமே உண்டு என்று வாதிடுகிறார்கள். இது சீர்திருத்தவாதிகள் போதித்த விசுவாசிகளின் ஆசாரியத்துவத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட விளைவு. விசுவாசிகள் அனைவருமே ஆசாரியர்கள்தான். சபையின் எல்லா அங்கத்துவர்களுக்கும் சம அந்தஸ்தும், கடவுளை ஆராதிப்பதில் வரையறையற்ற சுதந்திரமும் இருந்தபோதும், ஊழியத்தைப் பொறுத்தளவில் தேவன் தம் வார்த்தையில் மூப்பர்களையே சபைத் தலைவர்களாக நியமித்து 'பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களைப்' பயன்படுத்தும் அதிகாரத்தையும் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரத்தையும் அவர்களிடத்தில் தந்திருக்கிறார். ஆகவே சபையில் அதிகாரபூர்வமான எந்த ஊழியமும் மூப்பர்கள் தலைமையில் சபை அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுத் தான் நிகழ வேண்டுமே தவிர விசுவாசிகள் 'ஆசாரியர்களாக'த் தாம் நினைத்தபடி செயல்படக்கூடாது. விசுவாசிகள் தங்களுடைய பலவித ஆவிக்குரிய வரங்களையும் சபையின் நலனுக்காக எவருடைய வற்புறுத்தலோ, அங்கீகாரமோ இல்லாமல் பயன்படுத்த முடிந்தாலும், அதிகாரபூர்வமான ஊழியங்கள் (உதா: பிரசங்கம் செய்தல், குழுக்களில் வேதபாடமெடுத்தல், சுவிசேஷக ஊழியத்தில் ஈடுபடல் போன்றவை) சபை மூப்பர்களின் அங்கீகாரத்துடனேயே செய்யப்பட வேண்டும். இதைவிடுத்து எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உட்பட மறுத்துத் தான்தோன்றித்தனமாக செயல்படுவதற்கும் 'விசுவாசிகளின் ஆசாரித்துவத்திற்கும்' எந்தவித சம்பந்தமுமில்லை.

## திருச்சபையின் நிரந்தர ஊழியங்கள்

ஊழியத்தைப்பற்றிப் பேசுகின்ற கர்த்தருடைய வார்த்தை, இன்று திருச்சபையில் இருவித நிரந்தரமான ஊழியங்கள் மட்டுமே இருப்பதாகப் போதிக்கின்றது. அதாவது மூப்பர்களும், உதவியாளர்களும் மட்டுமே திருச்சபை ஊழியத்தைக் கொண்டு நடத்த இன்று சபைகளில் நியமிக்கப்பட வேண்டும். கர்த்தருடைய வார்த்தை முழுமையாகப் பழைய, புதிய ஏற்பாடுகளாக எழுதி முடிக்கப்படுவதற்கு முன்பாக கர்த்தர் திருச்சபைக்கு அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும் கொடுத்தார். வேதம் எழுத்துவடிவில் எழுதப்பட்டு நிறைவு பெற்றபின் மேல்குறிக்கப்பட்ட மூன்று ஊழியங்களும் நிறைவு பெற்றன. இவ்வூழியங்களைத் திருச்சபையின் அடிக்கல்லாகத் திருமறை கருதுகின்றது (எபேசியர் 4:11-12). ஆகவே இன்று சபையில் நிரந்தர ஊழியர்களாக மூப்பர்களும், உதவிக்காரர்களுமே உள்ளனர். சிலர் இனறு சுவிசேஷக ஊழியத்தையும் தொடர்ந்து வரும் நிரந்தர ஊழியமாகக் கருதுகிறார்கள். ஆனால் திருமறை அவ்வூழியம் போதக ஊழியத்தோடு இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது. அதாவது இன்று சபைகளில் நிரந்தரமாக சுவிசேஷக ஊழியக்காரர்களை நாம் கொண்டிராவிட்டாலும் ஒவ்வொரு போதகரும் சுவிஷேசகராகவும் செயல்பட வேண்டும் (2 தீமோதி 4:5). நற்செய்தியை எடுத்துச் சொல்லாமல் எவரும் போதக ஊழியத்தில் ஈடுபட முடியாது. இதையே பவுல் திமோத்திக்கு நினைவுபடுத்துகிறார்.

திருச்சபையின் நிரந்தர ஊழியர்களான மூப்பர்களில் இரு பிரிவுகளை நாம் அவதானிக்கின்றோம். அதாவது வேதவியாக்கியானம் செய்யும் முழுநேரபோதகர்களும், அவர்களுக்குத் துணை புரியும் சக மூப்பர்களும் இதில் அடங்குவர். இவ்விரு ஊழியங்களும் ஒரே பணியில் (Office) அடங்கியுள்ளன (திமோத்தேயு 2:17; வெளி. 2:1). இவர்களில் போதகர்கள் வேதத்தை சபைகளில் வழமையாகப் போதிப்பவர்களாக (Regular preachers) இருப்பர். ஏனைய மூப்பர்கள் போதக ஊழியத்தில் பங்கேற்று முழுநேரப் போதகர்களுக்கு ஊழியத்தில் துணை புரிவார்கள். ஆனால் இன்று பல நாடுகளிலும், வேதம் போதிக்கும் இந்த ஊழியப்பிரிவை புரிந்து கொள்ளாமல் மூப்பர்கள் திருச்சபையில் ஊழியப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. எல்லா மூப்பர்களும் சமமானவர்கள் என்ற போர்வையில் அனைவரும் பிரசங்கம் செய்ய வேண்டும் என்ற போராட்டத்தில் சிலர் குதித்துள்ளார்கள். இதனால் பல சபைகள் பாதிக்கப்பட்டு இன்று இருந்த இடம் தெரியாமல் போயிருக்கின்றன. மூப்பர்கள் அனைவருக்கும் தேவ ஆடுகளை வழிநடத்தும் போதக ஊழியத்தில் பங்கிருப்பதாகத்தான் வேதம் போதிக்கின்றதே தவிர, எல்லா மூப்பர்களும் பிரசங்கிகளாக இருக்க வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கவில்லை. மூப்பர்களில் சிலர் பிரசங்க ஊழியத்திற்காக விசேடமாக அழைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். பிரசங்க ஊழியத்திற்கும், போதனைக்கும் அவர்கள் தங்கள் நேரத்தின் அநேக பகுதியை செலவிடவேண்டியிருப்பதால் சபைகள் அவர்களை முழு நேர ஊழியத்தில் ஈடுபடுத்தி அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் கவனித்துக் கொள்ள வேண்டும். போதகர்களும் ஏனைய மூப்பர்களும் சமமானவர்களாகவும், சேர்ந்து ஒற்றுமையோடு பணிபுரிய வேண்டியவர்களாக இருந்தபோதும், அவர்கள் செய்யும் பணியில் வித்தியாசம் உண்டு. முழு நேரப் போதகர்கள் செய்யும் பணிக்குத் துணையாகவே மற்ற மூப்பர்கள் இருக்க வேண்டுமேயல்லாது, போதகர்களோடு தாம் சமம் என்று கூறி அவர்கள் பணியில் இச்சை வைத்து அதை நாடிப் போராடக்கூடாது. வேதம் மூப்பர்களுக்கிடையில் இருக்க வேண்டிய ஒற்றுமையைத்தான் வலியுறுத்துகிறதே தவிர அவர்கள் சமம் என்றும், அனைவரும் ஒரே காரியத்தைச் செய்து அச்சமத்துவத்துவம் வெளியில் தெரியும்படியாக இருக்க வேண்டும் என்று போதிப்பதில்லை. மூப்பர்களிடம் இருக்க வேண்டிய சமத்துவம் அவர்கள் செய்யும் ஊழியத்தில் அல்லாது அவர்களுடைய பணியிலேயே (Office) தங்கியுள்ளது. ஒரே பணியான மூப்பர் ஊழியத்தில் காணப்படும் இவ்விரு முக்கிய பிரிவுகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. தாழ்மையுணர்வோடு, மற்றவர்களோடு சேர்ந்து பணிபுரியும் பக்குவமில்லாதவர்களை மூப்பர்களாக நியமிப்பதாலேயே இத்தகைய வீண் பிரச்சனைகள் சபையில் தோன்றுகின்றன. (வளரும்)

# கற்றனைத்து ஊறும் அறிவு



கற்றனைத்து ஊறும் அறிவு' என்பது தமிழ்ப்புலவன் வள்ளுவன் வாக்கு. எந்தளவுக்கு நாம் படிக்கிறோமோ அந்தளவுக்கு அறிவு வளர்ச்சியும், முதிர்ச்சியும் அடைவோம் என்பது இதன் பொருள். வேதத்தில் நல்லறிவு பெறுவதற்கு நாம் வாசிக்கும் பயிற்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும். வேதத்தை அன்றாடம் ஊக்கத்தோடு வாசித்தல் அவசியம். அதே வேளை வேதசத்தியங்களைப் போதிக்கும் நல்ல நூல்களையும் நாம் வாசிக்க வேண்டும்.

வேதமும், வரலாறும் கிறிஸ்தவன் வாசிக்கும் பழக்கமுள்ளவனாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றன. வாசிக்க மறுப்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் இழக்க வேண்டியது அநேகம். ஏனெனில் அவர்கள் கடந்த இரண்டாயிரம் வருடங்களாக கர்த்தர் தந்துள்ள அற்புதமான கிறிஸ்தவ இலக்கியங்களில் அறிவில்லாது வளர்சியடையாது இருக்க நேரிடும். இத்தகையோர் வேதம் மட்டுமே போதும் என்று வாதிடுவார்கள். ஆனால் வேதத்தைத் தந்த நல்லாண்டவரே அநேகரைப் பயன்படுத்தி பல நூல்கள் மூலம் அதற்கு விளக்கமும் தந்துள்ளார். இவற்றைத் தூக்கி எறிய நாம் யார்?

வாசிக்க மறுக்கிறவர்கள் ஒரே வழியில் மட்டுமே சிந்திக்க முடியும். இன்று நாம் கிறிஸ்தவம் என்ற பெயரில் சுற்றிவரப்பார்க்கும் பலசபைகளிலும் மக்கள் அறியாமையினால் அறிவைத் துறந்துவிட்டு அனுபவத்தை மட்டுமே சார்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். எதையாவது அறிந்துகொள்ள விருமபினால் அவர்கள் அதைக்குறித்து ஜெபம் செய்ய முயற்சி செய்கிறார்களே தவிர வேதம் அதைக்குறித்து என்ன சொல்கிறது என்று ஆராய விரும்புவதில்லை. வேதத்தில் அறிவை வளர்த்துக் கொள்ளாததாலும், தேவன் தந்துள்ள நல்ல நூல்களைப் பயன்படுத்திக் கொள்ளாததாலும் அவர்கள் அறிவிழந்து நிற்கிறார்கள்.

நூல்களைப்பற்றிப் பேசுகின்றபோது இன்று எல்லா மொழிகளிலுமே நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவாத நூல்களே அநேகம். தமிழும் இதற்கு விதிவிலக்கல்ல. நூல்நிலையங்களை இன்று உப்புச்சப்பில்லாத புத்தகங்களே நிரப்புகின்றன. வேத அறிவும், ஆன்மீக வாழ்க்கையில் வளர்ச்சியும் அடைய வேண்டுமானால் அவற்றில் வளர்சி அடைந்தவர்கள் எழுதிய நூல்களே நமக்கு உதவலாம். அப்படிப் பார்க்கின்றபோது 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்திருத்த வாதிகள், பரிசுத்தவான்கள் எழுதிய நூல்களே நம்நினைவுக்கு வருகின்றது.

## "வாசிப்பு மனிதனை முழுமையானவனாக்குகின்றது"

**- பிரான்ஸிஸ் பேக்கன் -**

இக்காலங்களில் தேவன் அற்புதமாக திருச்சபையை ஆசீர்வதித்ததை வரலாறு விளக்குகின்றது. வரலாற்றில் கிறிஸ்தவம் பெருமையோடு விளங்கிய காலங்களில் எல்லாம் சிறப்பான நூல்கள் எழுந்துள்ளதைக் காணலாம். மார்டின் லூதர், ஜோன் கல்வின் ஆகியோருடைய எழுத்துகளிள் உள்ள தேவ பக்தியூட்டும் போதனைகளை இன்று எதில் காணமுடியும். இக்காலங்களில் கிறிஸ்தவம், எழுத்துத்துறையில் விசேடமான ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்ததை எவரால் மறுக்க முடியும்.

17 ஆம் நூற்றாண்டு பிரசித்தி பெற்ற ஒரு நூற்றாண்டு. திருச்சபைச் சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்டவர்கள் 'பரிசுத்தவான்கள்' (Puritans) என்று பிறரால் கேலியாக அழைக்கப்பட்ட காலமிது. இக்காலகட்டத்தில்தான் போலிப் போதனைகளில் இருந்து திருச்சபையைக் காப்பதற்காகத் திருமறையின் கோட்பாடுகளைத் திறம்பட எடுத்து விளக்கும் 'விசுவாச அறிக்கைகளும்', வினாவிடைப் பயிற்சி நூல்களும் வெளிவந்தன. ஜோன் ஓவன், தொமஸ் குட்வின், பிளேவல், சிப்ஸ், போன்றோருடைய ஆழமான ஆன்மீகக் கருத்துக்களும், தேவபக்திரசம் சொட்டும் போதனைகளும் நூல்களாக வெளிவந்தன. திருமறையைத் தேன் சொட்டச், சொட்டத் தெளிவாக, அனுபவரீதியாகப் பயன்படும் விதத்தில் எழுத்தில் வடிக்கும் வல்லமை இவர்களிடம் இருந்தது. ஜோன் கல்வினுடைய 'திருச்சபைக் கோட்பாடுகள்', ஜோன் ஓவனின் 'மரணத்தினால் உண்டாகும் வாழ்வு', கார்டினர் ஸ்பிரிங்ஸினுடைய 'கிறிஸ்தவன் யார்' ஆகிய மூன்று நூல்களும் ஒவ்வோரு கிறிஸ்தவனும் கட்டாயம் வாசிக்க வேண்டிய சிறப்பான நூல்கள். இவர்களுடைய எழுத்துக்களின் சிறப்பம்சங்களை இன்றைய நூல்களில் நாம் காண முடிவதில்லை. 'லோர்ட் மெக்கோலி' என்ற வரலாற்று ஆசிரியர் 'பியூரிட்டன்' காலத்தைக் குறித்துப் பேசும்போது 'இக்காலத்து கிறிஸ்தவ ஜாம்பவான்களின் மனம் கர்த்தரோடு அன்றாடம் தொடர்பு கொண்டு அவ்வனுபவத்தில் திளைப்பதில் விசேட கவனம் செலுத்தியது. உலக வரலாற்றில் தோன்றிய மிகச்சிறப்பான மனிதர்களாக இவர்கள் கருதப்பட வேண்டும்.' என்று கூறினார். இதேவிதமான கிறிஸ்தவ எழுப்புதலையே 18, 19 ஆம் நூற்றாண்டுகளிலும் நாம் அவதானிக்கலாம். இவற்றின் மூலம் கிறிஸ்தவ எழுப்புதல் ஏற்பட்ட காலப்பகுதிகளில் கிறிஸ்தவ இலக்கியங்களின் வளர்சியும், வாசிக்கும் பழக்கமும் உச்சகட்டத்தில் இருந்ததை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.


### வில்லியம் பார்க்ளே (1895 - 1960)

வில்லியம் பார்க்ளே கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்த வேத வல்லுனர். அவரது புதிய ஏற்பாட்டு 'அன்றாட வேத பாடங்கள்' பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு லட்சக்கணக்கில் விற்பனையாகியது. இருந்தபோதும் பார்க்ளே, கிறிஸ்துவின் பதிலீட்டுப் (Substitutionary) பாவ நிவாரணப்பலியை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு வேதத்தில் காணப்படும் அற்புதங்களையும் வெறும் அடையாளங்களாகவே கருதினார். வேதம் அருளப்பட்ட விதத்தையும் சந்தேகித்த பார்க்ளே இயேசு கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பைக் குறித்தும் கேள்வி எழுப்பினார். பார்க்ளேயின் நூல்கள் இன்று வேதாகமக் கல்லூரிகள் பலவற்றை அலங்கரிக்கின்றன. இவற்றைப் படிப்பவர்களின் ஆவிக்குரிய வாழ்வு என்னாவது?

# வாசிக்காமல் போதிப்பதா?

ஒருவர் சிந்திப்பதற்கு வாசிப்பு அவசியம். சிந்திக்கும் அனைவருக்குமே வாசிக்கும் பழக்கம் இருக்கவேண்டும். அதிலும் வேதத்தை அன்றாடம் எடுத்து விளக்கும் ஊழியத்தில் ஈடுபட்டுள்ள போதகர்களுக்கு வாசிக்கும் பயிற்சி அதிமுக்கியம். வாசிப்பு போதகனை சிந்திக்க வைக்கிறது. வேதத்தை வாசிப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல அவ்வேதத்தைப் புரிந்து கொள்ளத்துணை புரியும் நூல்களை வாசிப்பதும் அவசியம். போதக ஊழியத்தில் ஈடுபட்டுள்ள அநேகர் தமது வேலைப்பளுவினால் வாசிப்பதையே முற்றாகத் தவிர்த்துவிடுகிறார்கள். சிலர் வேதத்தை மட்டும் வாசித்தால் போதும் வேறு எதுவும் தேவையில்லை என்ற எண்ணத்தையும் கொண்டுள்ளார்கள். சிறையிலிருந்த பவுல் தீமோத்தேயுவிடம் நீ வரும்போது புத்தகங்களைக் கொண்டுவா (1 தீமோ. 4:13) என்று கூறுவதைப் பார்க்கிறோம். பவுல் வாசிப்பின் அவசியத்தை உணர்ந்திருந்தான். நல்ல நூல்களை வாசிக்கும் பயிற்சியைக் கொண்டிராத போதகர்கள் வேத சத்தியங்களை, வருடாவருடம் கேட்பவர்களுடைய சிந்தனையைத் தூண்டும்விதத்திலும், அவர்களுடைய அன்றாட நடைமுறை வாழ்க்கைத் தேவைகளைச் சந்திக்கும்விதத்திலும் போதிக்க முடியாது. இதனால் அவர்களுடைய ஊழியம் புத்துணர்ச்சியற்று, நீர்பாய வழியில்லாத தேக்கமுள்ள ஒரு குட்டையைப்போல மாறிவிடும்.

தமிழில் நல்ல நூல்கள் அநேகம் இல்லாவிட்டாலும் சமீபகாலமாக பல நல்ல நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. ஒருகாலத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்த அருமையான நூல்கள் இப்போது கைக்கெட்டும் தூரத்தில் உள்ளன (அத்தகைய நூல்களின் பட்டியலை இவ்விதழில் தந்துள்ளோம்). நாம் வாசித்த நூல்களின் தொகை அல்ல நமது அறிவை நிர்ணயிப்பது; எந்தளவுக்கு அக்கறையோடு அறிவுபூர்வமாக அந்நூல்களை வாசித்து அதைக்குறித்து சிந்திக்கிறோம் என்பதுதான் முக்கியம். ஞானியான சாலமோன் சொல்வதுபோல 'அநேக புத்தகங்களை உண்டு பண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு' (பிரசங்கி 12:12). குறைந்தளவாயிருந்தபோதும் தேவையான நல்ல நூல்களை திறம்படப் பயன்படுத்துவதிலேயே நம் அறிவின் மேன்மை தங்கியுள்ளது. இவ்விதழில் தரப்பட்டுள்ள நூல்களைப் பெற்று கருத்தோடு வாசிக்கும் எவரும் நிச்சயம் தமது ஊழியத்தில் பயனடைவார்கள். போதகர்களே, உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காகவும், நீங்கள் போதிக்கும் மக்களின் பயன்கருதியும் நல்ல பயனுள்ள நூல்களை வாங்கி வாசியுங்கள்.



# வாசிப்பது எப்படி?

வாசிப்பது எவ்வளவு அவசியமோ அந்தளவுக்கு எதை வாசிப்பது? எப்படி வாசிப்பது? என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். வாசிப்பதற்கு துணை புரியும் சில அறிவுரைகளைப் பார்ப்போம்.

1. நமது விசுவாசத்திற்கு துணைபுரியும் நல்ல நூல்களையே வாசிக்க வேண்டும். இரண்டாந்தரமான நூல்களை நாம் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது. இன்று புத்தகக்கடைகளில் காணப்படும் தொண்ணூற்றி ஐந்து வீதமான நூல்கள் நமது விசுவாச வளர்ச்சிக்குத் துணை செய்யா. போல் யொங்கி சோ, சாம் ஜெபத்துரை, ஓரல் ரொபட்ஸ், சாது செல்லப்பா போன்றோருடைய நூல்களால் எந்தப்பயனும் அடைய முடியாது. தம்மை வளர்த்துக் கொள்ளவும், 'லிபரல்' கொள்கைகளைப் பரப்பவுமே நூல்கள் எழுதும் இத்தகையோரால் நமது விசுவாச வாழ்க்கைக்குத் தீங்கு ஏற்படும்.

2. அநேக நூல்களை வாசிக்க வேண்டிய அவசியமில்லை. தெரிவு செய்த சில நல்ல நூல்களில் திறனடைவதே முக்கியம் (பிரசங்கி 12:12). சிலர் தாம் நிறைய வாசித்திருப்பதாகப் பெருமை பாராட்டலாம். ஆனால் சிந்திக்காமல், வாசித்ததை ஆராய்ந்து பிரித்துணரும் திறனற்று இருப்பவர்கள் அறிவு மங்கியவர்களே. ஆகவே ஒருசில நல்ல சில நூல்களில் கரை காண்பதே காலத்திற்கும் சிறந்தது.

3. ஒரு நூலை எவ்வளவு சீக்கிரம் வாசிக்கிறோம் என்பதல்ல முக்கியம்; அதை எவ்வளவு தூரம் பொறுமையோடு வாசித்து, வாசித்ததைக் கிரகித்து, அதைக்குறித்து சிந்தித்து வாழ்வில் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். ஒவ்வொரு நாளும், நூலின் சில பக்கங்களைத் தொடர்ச்சியாக விடாமல் வாசிப்பது, வேகமாக வாசித்து ஒன்றும் புரியாமல் இருப்பதைவிட மேலானது.

**"கிறிஸ்தவர்கள் ஆராய்ந்தறியும் திறனற்று, கோப்பையிலிருந்து மாசுள்ள நீரைப்பருகும் பார்வையற்ற குருடனைப்போல் மாறும் நாள் வெகுதூரத்தில் இல்லை"**

*(19ஆம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் கெனடி என்ற போதகர் கூறியது)*

4. வாசிப்பு ஒரு கலை, அதாவது பயிற்சி. அது தானாகவே வந்துவிடாது. அதற்காக நாம் நேரம் ஒதுக்க வேண்டும். நம்மையும் நம் மனத்தையும் தயார் செய்து கொண்டு எந்தத்தடங்கலும் இல்லாத நேரத்தில் வாசிக்கப் பழக வேண்டும்.

5. நாம் வாசிக்கும் அனைத்தையும் வேதத்தோடு ஒப்பிட்டு ஆராய்தல் அவசியம். வேதமே எல்லாவற்றிலும் மேலானது. வேதத்தை விளங்கிக் கொள்வதற்காகவும், அதில் மேலும் அறிவு பெறுவதற்காகவுமே நாம் நூல்களை வாசிப்பதால், வாசிப்பவற்றை சிந்தித்து ஆராய்வது அவசியம். சிந்திக்க சோம்பேறித்தனப்படுபவர்கள் வாசிப்பினால் எந்தப்பயனையும் அடைய முடியாது.

6. வாசிக்க நாம் தெரிவு செய்யும் நூல்கள் வேதத்தின் எல்லா சத்தியங்களையும் போதிப்பதாக இருக்க வேண்டும். அதாவது ஒரே விடயத்தில் மட்டும் அக்கறை செலுத்தக்கூடாது. முக்கிய வேதக்கோட்பாடுகளை நாம் படிக்க முயல வேண்டும். வேதக் கோட்பாடுகளில் கவனம் செலுத்தாததனால்தான் இன்று பலர் போலிப்போதனைகளினால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். கல்வினின் 'திருமறைக்கோட்பாடுகள்' மீண்டும், மீண்டும் படிக்க வேண்டிய ஒரு நூல். அத்தோடு திருச்சபை சரித்திரத்தையும், சான்றோர் சரிதங்களையும் வாசிக்கத் தவறக்கூடாது.

# வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள்



*கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்ததொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையையும்', வெஸ்மின்ஸ்டர் திருமறைக்கல்வி நூல், பென்ஜமின் கீச்சின் திருமறைக்கல்வி நூல் ஆகியவற்றைத் தழுவிய திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார்.*

*கேள்வி 21: கடவுள் முழு மனித இனத்தையும் பாவத்தாலும் அவலத்தாலும் அழிந்து போகும் நிலையில் விட்டாரா?*

*கடவுள் அநாதிகாலமுதல் தனது நன் நோக்கத்தின்படி சிலரை நித்திய ஜீவனுக்காகத் தெரிந்துகொண்டதோடு, அவர்களைப் பாவம் அதனால் ஏற்படும் அவலம் ஆகியவற்றிலிருந்து விடுவித்து, இரட்சிப்பை அடைவதற்கான வழிமுறையை மீட்பரொருவரின் மூலமாக ஏற்படுத்தினார்.*

*(எபேசி. 1:4; ரோமர் 3:21-22)*

**விளக்கக்குறிப்பு:** இவ்வினாவிடை கடவுளின் நிபந்தனையற்ற தெரிந்துகொள்ளுதலைப்பற்றிப் போதிக்கின்றது. 1. கடவுள், பாவத்தில் வீழ்ந்துள்ள மனிதரின் மொத்தத் தொகையில் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகையினரை இரட்சிப்பைப்பெறும்படியாக தெரிந்துகொண்டுள்ளார் என்றும், 2. இவர்களில் காணப்பட்ட எந்தவித நன்மைகளின் அடிப்படையிலும் கடவுள் இவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை என்றும், கடவுளின் தெரிந்துகொள்ளுதல் நிபந்தனையற்றது, ஏனெனில் அவர் தெரிந்துகொள்ளப்படாதவர்களில் காணப்படாத எதையும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் காணவில்லை என்றும், 3. கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்றும், 4. இறுதியாக அநாதி காலத்திலிருந்தே இத்தெரிந்துகொள்ளுதலானது கடவுளால் நிர்ணயிக்கப்பட்டது என்றும் இப்போதனை விளக்குகின்றது. இவை ஒவ்வொன்றையும் விளக்க இங்கே இடமில்லாவிட்டாலும் இவை வேதத்தில் தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ள உண்மைகள்.

*கேள்வி 22: கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் மீட்பர் யார்?*

*பதில்: மனித உருவெடுத்து, ஒரே ஆளில் கடவுள், மனிதன் ஆகிய இருவேறு தன்மைகளைக் கொண்டு அன்றும் இன்றும் என்றும் தொடர்ந்து நித்திய தேவகுமாரனாக இருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் மீட்பர்.*

*( 1 தீமோ. 2:5; யோவான் 1:14; ரோமர் 9:5; எபிரே. 7:24)*

**விளக்கக்குறிப்பு:** இயேசு *ஒருவரே* என்ற பதத்தை நாம் முக்கியமாக இங்கே அவதானிக்க வேண்டும். எல்லா மதங்களிலும் உண்மை இருக்கிறது என்று போதிக்கப்பட்டு வரும் இக்காலத்தில் வேதம் இயேசு *ஒருவரே* தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மீட்பராகவுள்ளார் என்று வலியுறுத்துகிறது (மத்தேயு 4:10; யோவான் 17:3; 3:16; அப். 4:12; யோவான் 14:6; 1 யோவான் 2:23). World Counsil of Churches உடன் தொடர்புடையவர்கள் இன்று நற்செய்தியை எடுத்துச் சொல்வதைப் பணியாகக் கொள்ளாமல் "தத்துவக் கலந்துரையாடலில்" ஈடுபட்டு வருகிறார்கள். அதாவது மற்றவர்களுடைய மதத்திலும் உண்மை இருக்கிறது என்ற அடிப்படையில் அவர்கள் சொல்வதையும் நாம் கேட்க வேண்டும் என்பது இவர்களது வாதம். இவ்விருமுகக் கலந்துரையாடலின் மூலம் ஒரு புது மதத்தைத் தோற்றுவிப்பது இவர்களின் நோக்கமாகவுள்ளது. இப்புது மதம் எல்லா மதங்களிலும் உள்ள "நன்மைகளை" உள்ளடக்கியதாக இருக்கும் என்பது இவர்களுடைய எதிர்பார்ப்பு. இப்போலிப்போதனைக்கு எதிரான திருமறையின் நிலையை இவ்வினாவிடை விளக்குகிறது. இயேசு கிறிஸ்துவை *மட்டுமே* ஆண்டவராக ஏற்றுக்கொள்ள மறுக்கும் அனைவரும் விரிவும், விசாலமுமான வாசலின் வழியில் கேட்டை நோக்கிப் போகிறவர்களாக இருக்கிறார்கள். இதையே இவ்வினாவிடை வலியுறுத்துகிறது.

அத்தோடு கிறிஸ்துவில் கடவுள், மனிதன் ஆகிய இரு தன்மைகள் இருப்பதாக திருமறை கூறுகின்றது. "ஜெகோவாவின் சாட்சிகள்" கிறிஸ்துவில் "தெய்வீகத் தன்மை" மட்டுமே இருப்பதாகப் போதிக்கிறார்கள். "லிபரல்" கொள்கையுடையோர் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை ஒப்புக் கொண்டாலும், அவர் பிதாவுக்கும், பரிசுத்த ஆவிக்கும் சமமானவரல்ல என்று நம்புகிறார்கள். வேறு சிலர் அவரது மானிடத்தன்மையை மறுதலிக்கிறார்கள். ஆனால் வேதமோ கிறிஸ்து ஒரே ஆள் என்பதோடு, அவரில் பூரணமான ஒற்றுமையுடன் கடவுள், மனிதன் ஆகிய இரு தன்மைகளும் காணப்படுவதாகப் போதிக்கின்றது. இதைக் கிறிஸ்தவர்கள் வெறும் மனித ஞானத்தைப் பயன்படுத்திப் புரிந்து கொள்ள முயலாமல் விசுவாசத்தோடு நம்புதல் அவசியம். நான்காம் நூற்றாண்டில் "பிசப்பாக" இருந்த "ஏரியன்" என்பவன் கிறிஸ்துவின் ஆள்தன்மையை இவ்வாறாகத் திரிபு படுத்தியதை திருச்சபை வரலாறு விளக்குகிறது. "அத்தனேஸியஸ்" என்ற மனிதனால் திருச்சபைக்கு வரவிருந்த ஆபத்தும் அக்காலத்தில் தவிர்க்கப்பட்டது. இத்தகைய போலிப்போதனைகள் இன்றும் நம்மைச்சுற்றி வலம் வருகின்றன.

*கேள்வி 23: தேவகுமாரனாகிய கிறிஸ்து எவ்வாறு மனித உருவெடுத்தார்?*

*பதில்: தேவகுமாரனாகிய கிறிஸ்து மெய்யான சரீரத்துடனும், நேரிய ஆவியுடனும், பாவமற்று, பரிசுத்த ஆவியின் வல்லமையால், கன்னித் தன்மையுடனிருந்த மரியாளின் உதரத்தில் மனிதனாகப் பிறந்தார்.*

*(எபிரே. 2:14; மத். 26:38; லூக்கா 1:31, 35; எபிரே. 7:26)*

**விளக்கக்குறிப்பு:** இங்கே நாம் ரோமன் கத்தோலிக்க சபையின் போதனையை திருமறையின் போதனையோடு ஒப்பிட்டுப் பார்த்தல் அவசியம். ரோமன் கத்தோலிக்க சபை கன்னித் தன்மையைப் பெரிது படுத்தி மரியாளைத் தெய்வமாக்குகிறது. ஆனால் திருமறையோ கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கிறிஸ்து பிறந்த விதத்தின் சிறப்பைப் பற்றித்தான் வேதம் வலியுறுத்துகிறதே தவிர மேரியைப் பெருமைப்படுத்தவில்லை. தேவ மனிதனாகிய இயேசுகிறிஸ்துவை மரியாள் பெற்றெடுத்திருந்தாலும் அவள் தெய்வமல்ல. கத்தோலிக்க மதம் மரியாளின் கன்னித் தன்மையை பாவமற்றதாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அதாவது மரியாள் பிறந்தது முதல் தொடர்ந்து கன்னித்தன்மையுடன் இருந்ததாக அது போதிக்கின்றது. அது திருமறைக்கு எதிரான போதனை. இயேசு பிறக்கும்வரை மரியாள் கன்னித் தன்மையுடன் இருந்ததாகவே வேதம் போதிக்கிறது (மத்தேயு 1:25).

பாவமற்ற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கன்னித்தன்மையுடன் இருந்த மரியாளின் வயிற்றில் பிறந்தார் என்று அறிவிப்பதற்காகவே திருமறை, மரியாளின் கன்னித்தன்மையைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறுகின்றது. தேவ மனிதனாகிய கிறிஸ்து அற்புதமாக பரிசுத்த ஆவியின் செயலால் கன்னி மேரியின் வயிற்றில் பிறந்து மனிதத் தன்மையை ஏற்றார். இருந்த போதும் மரியாளின் பாவம் அவரைப் பற்றவில்லை. அத்தோடு கிறிஸ்து ஏனைய மனிதரைப்போலத் தாமும் அதேவிதமான சரீரத்தையும், ஆவியையும் உடையவராக இருந்தார், (எபிரேயர் 2:17, 18) ஆனால் அவரில் பாவம் மட்டும் காணப்படவில்லை. கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பை உள்ளடக்காமல் பாவிகளுக்கு இரட்சிப்பைக் கூறும் நற்செய்தி அமைய முடியாது.

**“இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்.”**

*கேள்வி 24: கிறிஸ்து எமது மீட்பராக எத்தகைய பணிகளைச் செய்கிறார்?*

*பதில்: கிறிஸ்து எமது மீட்பராக தீர்க்கதரிசி, ஆசாரியர், அரசன் ஆகிய பணிகளைத் தனது தாழ்த்தப்பட்ட நிலையிலும், உயர்த்தப்பட்ட நிலையிலும் நிறைவேற்றுகிறார்.*

*(அப். 3:22; எபிரே. 5:6; சங். 2:6)*

**விளக்கக்குறிப்பு:** கடவுள் மனிதனை உருவாக்கியபோது அவனைத் தன் சாயலில் உருவாக்கினார். அப்போது மனிதன் மெய்யான அறிவையும், நீதியையும், பரிசுத்தத்தையும் கொண்டிருந்தான். ஆகவே அவன் ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், அரசனாகவும் இருந்தான் என்று கூறலாம். ஆதாம் பாவம் செய்து தன் நிலையிலிருந்து வீழ்ந்தபோது நாமும் அவனோடு வீழ்ந்தோம். ஆகவே நாமனைவருமே அறிவீனராய், குற்ற உணர்வுடையவராய், பாவிகளாய் மாறினோம். இத்தகைய நிலையிலிருந்து சிலரைக் காப்பாற்றுவதற்கு கடவுள் என்ன செய்துள்ளார் என்பதையே திருமறை அறியத்தருகின்றது.

பழைய ஏற்பாடு கடவுள் தன் ஒரே குமாரனை அனுப்பி தன் மக்களை இரட்சிக்கும் நாளுக்காகத் தயார் செய்துள்ள வழிமுறைகளைத் தெரிவிக்கிறது. பழைய ஏற்பாட்டு வரலாறு கடவுளால் தெரிவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், அரசர்கள் ஆகியோரைச் சுற்றி வலம் வருகிறது. இயேசுகிறிஸ்து இவ்வுலகிற்கு வரும்வரை இவ்வழிகளில் கடவுள் தம் சித்தத்தை வெளிப்படுத்தினார். கிறிஸ்துவின் வருகையோடு இம்மூன்று பணிகளும் அவரில் நிறைவடைந்தன. கிறிஸ்து மீட்பாகிய பெருங்காரியத்தில் இம்மூன்று பணிகளையும் ஒன்றிணைத்தார். இவ்வுலகில் இருந்த காலத்தில் மட்டுமல்லாமல் கிறிஸ்து இன்றும் இம்மூன்று பணிகளையும் விண்ணுலகில் இருந்து நிறைவேற்றுகிறார்.

இரட்சிப்பை அடைவதற்கு இன்று ஒருவன் கிறிஸ்துவை இம்மூன்று விதத்திலும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. 1. முதலில் கிறிஸ்துவை ஒருவன் வார்த்தையின் மூலமும், ஆவியினாலும் அறிந்து கொள்ளல் வேண்டும். தனது பாவத்தையும், கிறிஸ்துவைப் பாவநிவாரணியாகவும் அறிந்துணர வேண்டும். 2. தான் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்தப்படுத்தப்பட வேண்டுமென்பதை உணர வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலி சகல பாவங்களையும் சுத்திகரிக்கப் போதுமானது என்று விசுவாசிக்க வேண்டும். 3. பாவத்தில் இருந்து விடுபட்டு அதற்கு அடிமைப்படாத வாழ்க்கை வாழ்தல் வேண்டும். ஆகவே இன்று உண்மையில் இரட்சிக்கப்படும் எவருடைய வாழ்விலும் கிறிஸ்து தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், அரசனாகவும் இருக்கிறார்.

இவ்வினாவிடை இம்மூன்று பணிகளையும் நாம் நினைத்தவாறு பிரித்துப் பயன்படுத்த முடியாது என்ற உண்மையையும் போதிக்கிறது. ஒரு பணியை மேன்மைப்படுத்தி மற்றதைக் குறைவுபடுத்த முடியாது. சிலர் தமக்கு வேதத்தில் ஓரளவு அறிவு இருப்பதால் தாம் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொள் கிறார்கள். வெறும் அறிவு மட்டும் ஒருவனில் மனந்திரும்புதலை ஏற்படுத்தாது. வேறு சிலர் அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் மட்டும் விசுவாச வாழ்க்கையாகக் கருதுகிறார்கள். ஆனால் வெறும் அறிவு, அனுபவம், அல்லது உணர்ச்சிகள் மட்டும் ஒருவனைக் கிறிஸ்தவனாக்கிவிடாது. கிறிஸ்து தீர்க்க தரிசியாகவும், ஆசாரியராகவும், அரசராகவும் ஒருவரது வாழ்வில் அமைய வேண்டுமானால் அவனில் கிறிஸ்துவைப்பற்றிய மெய்யான அறிவு ஏற்பட்டு அதன்மூலம் உள்ளுணர்வுகள் மாற்றமடைந்து, சித்தம்திரும்பி, மனந்திரும்புதல் ஏற்படல் வேண்டும்.

இம்மூன்று பணிகளுடன் கிறிஸ்துவை எற்றுக்கொண்டு, செயற்படாத எந்த சபையுடனும் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் இருக்காது என்பதையும் நாம் உணர வேண்டும். திருமறையைக் களங்கமில்லாது குற்றமறப் போதிப்பதன் மூலமும், திருவருட் சாதனங்களை விசுவாசத்தோடு செயற்படுத்துவதன் மூலமும், சபை ஒழுங்குமுறையைக் கடைப்பிடிப்பதன் மூல்மும் மட்டுமே திருச்சபைகள் இன்று தீர்க்கதரிசி, ஆசாரியர், அரசர் ஆகிய பணிகளைச் செய்ய முடியும். இவற்றில் ஒன்றை மட்டும் கொண்டிருப்பதால் எந்தக் குழுவும் சபையாகிவிட முடியாது. இன்று அநேக சபைகள் திருமறையை முறையாகப் போதிக்கத் தவறுவது மட்டுமல்லாமல், சபை ஒழுங்கு முறையையே உதாசீனம் செய்து வருகிறார்கள். கிறிஸ்து ஆட்சி புரியும் சபைகளில் போலிப் போதனைகளுக்கோ, தவறான உலகப்பிரகாரமான ஆராதனை முறைகளுக்கோ, சட்டசபைகளில் நாம் காணும் மக்களாட்சி முறறைக்கோ இடமிருக்காது. கிறிஸ்து ஆட்சிபுரியும் சபைகளில் கிறிஸ்துவின் வார்த்தைக்கு மட்டுமே மதிப்பிருக்கும்; மாண்பிருக்கும்.

*திருமறைத்தீபம்*

*‘திருமறைத்தீபம்’ சவரின் கிறேஸ் சபையால்* (**Sovereign Grace Church, Auckland, New Zealand**) *வெளியிடப்படும் காலாண்டுப்பத்திரிகை. ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.*

*ஆசிரியர்: R. பாலா    தொலைபேசி எண்: (09) 527 1522*

**The Bible Lamp,**
**P. O. Box 62-159, Sylvia Park, Auckland, New Zealand**



# திருமறை ஒரு நடமாடும் நூலகம்

கடவுள் எத்தனையோ வழிகளில் தன்னை வெளிப்படுத்தியிருக்க முடியும்; இருந்தபோதும் அவர் எழுத்தையே தெரிவு செய்தார். அப்படியானால் அவ்வார்த்தையை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

## எழுத்தில் தெளிவான வெளிப்படுத்தல்

கடவுள் எழுத்தின் வடிவில் தன்னை வெளிப்படுத்தியுள்ள உண்மையை எவருமே மறுதலிக்க முடியாது. அவர் தன்னை நாட்டியத்தின் மூலமாகவே, நாடகத்தின் முலமாகவோ, அடையாளங்கள் மூலமாகவோ அல்லது சங்கீதத்தின் மூலமாகவோ வெளிப்படுத்தியிருக்க முடியும். இருந்த போதும், கடவுள் எழுத்தையே நாடினார்.

அவற்றை அவர் கடைப்பிடிக்காத தற்கு காரணம் இதுதான். அதுமட்டு மல்லாது கடவுள் நாம் சிந்திக்க வேண்டுமென்று விரும்புகிறார். அவர், தான் இதுவரை அடையாளங்கள், தீர்க்கதரிசனங்கள், நடைமுறைச் சம்பவங்கள், அற்புதங்கள், இரட்சிப் பிற்காகக் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் ஏற்படுத்திய வழிமுறைகள் அனைத்தையும் எழுத்தில் கொடுத்த காரணமே நாம் சிந்தித்து அவற்றின் மூலம் அவரது சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் (I கொரி. 10:1-11). ஆவியின் துணையோடு இவற்றை வாசித்து, சிந்தித்து வாழ்க்கையில் கடைப்பிடிப் பவர்கள் தேவனைப் பிரியப்படுத்து கிறார்கள்.

## கிறிஸ்தவன் வாசிப்பவன்

இவற்றின் மூலம் நாம் எதைப் புரிந்து

> **“சில மனிதரில் ஆணவத்தையும்விட மோசமானதொன்றைக் காண்கிறோம்; அது அவர்களுடைய அறியாமைதான்”**
>
> - மெத்தியூ ஹென்றி -

அவர் ஆதியில் எமது மூதாதையர்களோடு பேசியிருக்கிறார். ஒருதடவையல்ல பல தடவைகள் கடவுள் தனது சித்தத்தை அவர்கள் அறிந்து கொள்ளும்படியாகப் பேசி யிருக்கிறார். அவர் தொடர்ந்து அவ்வாறு செய்திருக்கலாம். ஆனால், மற்ற எல்லா வழிமுறைகளையும்விட எழுத்தையே கடவுள் விசேடமாக நாடினார் என்றால் அதற்கு முக்கிய காரணம் இருக்க வேண்டும். எழுத்தில் இல்லாத ஒலியை நாம் காதால் கேட்க முடிந்தாலும் அதை மறந்து போய்விடக்கூடிய வாய்ப் புண்டு. சாதாரண மனிதர்களான நாம் தொடர்ந்து பார்க்கவும், வாசிக்கவும் சிந்திக்கவும் வைக்கக் கூடியது எழுதப்பட்ட வார்த்தை மட்டுமே. மற்ற வழிகளின் மூலம் கடவுளால் தொடர்ந்து தம்மை வெளிப்படுத்தியிருக்க முடிந்தாலும்

கொள்கிறோம்? அதாவது வேதம் ஒரு நூல்நிலையம் என்பதைத்தான். வேதத்தில் உள்ள அனைத்துப் புத்தகங்களும் கடவுளின் வரலாற்றை யும், அவர் தன் சித்தப்படி செய்கின்ற காரியங்கள் அனைத்தையும் நமக்குத் தெரிவிக்கின்றன. கடவுளை அறிந்து கொண்ட அறிவில் வளரவேண்டிய அனைவரும் இந்நூல்நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வேதமாகிய நூல்நிலையத்தில் பயிலும் கிறிஸ்தவன் படைப்பு, கிறிஸ்தவ வரலாறு, இலக்கியம் ஆகியவற்றைக் கற்கிறான். நல்ல பயனுள்ள கிறிஸ்தவ இலக்கியங்கள் இவற்றில் நாம் மேலும் விளக்கம் பெறத் துணையாக அமையும். மெய்யான கிறிஸ்தவன் வாசிப்பதில் ஊக்கம் காட்டுவான். வாசிக்க மறுக்கும் கிறிஸ்தவனுக்கும் வேதத்திற்கும் எந்தத் தொடர்பு மேயில்லை.

# சுசானா ஸ்பர்ஜன்

மகா பிரசங்கியான சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜனின் அருமை மனைவியார் சுசானா. ஸ்பர்ஜனின் அன்புக்குரிய வாழ்க்கைத் துணைவியாக இருந்து மட்டுமல்லாமல் அவரது ஊழியத்திற்கும் பெருந்துணையாக இருந்தார் சுசானா. ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்று கூறுவார்கள். அது ஸ்பர்ஜனைப் பொறுத்தவரை மிகப் பொருந்தும். ஸ்பர்ஜன் போதக ஊழியத்திற்கு அழைக்கப்படுபவர்களுக்கு அறிவுரைகூறி எழுதிய ‘என்னுடைய மாணாக்கருக்கான அறிவுரைகள்’ என்ற நூலை சுசானாவிற்குக் காட்டியபோது அவர், ‘இங்கிலாந்திலுள்ள ஒவ்வோரு போதகரும் இந்நூலை வாசிக்க வைக்க என்னால் முடியுமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்’ என்று உற்சாகத்தோடு கூறினார். உடனே ‘ஏன் அதை நீ செய்யக்கூடாது’ என்று ஸ்பர்ஜன் கேட்டது சுசானாவை சிந்திக்க வைத்தது. உடனடியாகத் தன்னிடமிருந்த நகைகளை விற்று அந்நூலின் நூறு பிரதிகளை அச்சேற்றினார் சுசானா. இவ்வாறாக நூல்கள் வாங்கப் பணமில்லாத போதகர்களுக்கான ‘திருமதி சுசானா ஸ்பர்ஜனின் நூல் நிதி’ தொடங்கியது. முதல் வருடத்திலேயே ஸ்பர்ஜனின் பிரசங்கங்கள், ஏனைய நூல்கள் அடங்கிய நாலாயிரம் நூல்களை அவரால் விநியோகிக்க முடிந்தது. அவருக்கு நன்றிகூறி பலநூறு கடிதங்கள் வந்து குவியத் தொடங்கின. இச்சேவை சில வருடங்களுக்குள்ளாக மற்ற உலக நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. சுசானாவின் இறுதிக்காலங்களில் இந்நூல் நிதி ஊழியத்தின் மூலம் 200,000 நூல்கள்வரை போதகர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. சுசானாவின் ஊழியத்தின் மூலம் பலனடைந்த வசதியற்ற போதகர்கள் அநேகர். நல்ல நூல்களின் அவசியத்தையும், பலனையும் தன் கணவரின் ஊழியத்தின் மூலம் உணர்ந்திருந்த சுசானா ஏனையோரும் அவற்றின் மூலம் பயனடைய வேண்டும் என்ற ஆர்வத்தோடு தனது இறுதிக்காலம் வரை உழைத்தார். வரலாறுள்ள வரையும் கிறிஸ்தவ உலகம் அவரை மறக்காது.

# நல்ல நூல்களைத் தெரிவு செய்வதெப்படி?

"புத்தகங்கள் ஆசிரியர்களால் முடியாதபோது, அவர்களுக்கு வசதியில்லாதபோது, அவர்கள் விரும்பாதபோது அதற்கும் மேலாக அவர்கள் இல்லாதபோது பிரசங்கிக்கும் வல்லமையைக் கொண்டிருக்கின்றன" - *தொமஸ் புருக்ஸ்*

நல்ல நண்பர்கள் நமக்குத் துணை யாயிருப்பதுபோல் நல்ல நூல்கள் எப்போதும் நம் வாழ்வில் ஒளியேற்றும். முதலாம் சங்கீதம் துன்மார்க் கரினுடைய ஆலோசனை நமக்குப் பெருந்துன்பம்தருமென எடுத்துக் காட்டுகிறது. தீயமனிதர்களை நண்பர் களாகக் கொண்டால் எப்படி நாம் வழிதவறிப் போய்விடலாமோ அதே போல் கண்களுக்கு மட்டும் குளிர்ச்சி தரும்வகையில் காணப்படும் நூல் களாலும் நமக்கு ஆபத்து எற்படும்.

நல்ல நண்பர்கள் எப்படி நமக்கு அவசியமோ அதேபோல நல்ல நூல்கள் நமக்கு அவசியம். எல்லோரையும் நாம் நண்பர்களாக ஏற்றுக் கொள்வதில்லை. ஏனேனில் ஒருவன் நமது நண்பனாக இருக்க சில அடிப்படை இலக்கணங் கள் அவனுடைய வாழ்வில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதேபோல் நாம் நூல்களைத் தெரிவு செய்யும்போது சில அடிப்படைத் தன்மைகளை அவை கொண்டிருக் கின்றனவா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அத்தகைய அடிப்படைத் தன்மைகள் யாவை?

1. அது மிகப் 'பிரபலமான' ஒரு எழுத்தாளராலோ அல்லது பிரசங்கி யாலோ எழுதப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. கொரியாவின் யொங்கி சோ, தமிழ்நாட்டு சாம் ஜெபத்துரை போன்றோர் பிரபல மானவர்கள். ஆனால் அவர்கள் வேதத்திற்குப் புறம்பானவற்றை எழுத்தில் தொடர்ந்து வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவை நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உற்ற நண்பர்களாக இருக்க முடியாது. அதுமட்டுமல்லாமல், பிரபலமான வர்கள் வேதத்திற்குப் புறம்பானவற்றை உண்மையைப்போலத்தோன்றும்படி எழுதுவதில் கைதேர்ந்தவர்கள். எத்தனை பேர் இன்று விபரம் புரியாமல் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும், அற்புதங் களையும், பதிலீட்டுப் (Substitutionary) பாவநிவாரணப் பலியையும், மறுதலித்த மிகப் பிரபலமான வில்லியம் பார்க்ளேயின் புத்தகங்களை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2. அது வேதத்தின் அடிப்படையில் அமைந்ததாக இருக்க வேண்டும். வேதத்தின் போதனைகளை நாம் சரியாக அறிந்திருத்தல் எத்தனை அவசியம் என்பதை உணர வேண்டும். வேதம் கடவுளைப்பற்றியும் அவரது செயல்களைப்பற்றியும் என்ன சொல்கிறது என்று அறியாவிட்டால் நாம் எதைக்கொண்டு நூல்களை, அவை நமக்கு நன்மையளிப்பவையா? இல்லையா? என்று ஆராய்வது. வேதத்தில் முறையான அறிவில்லாத தால்தான் திராவிட சமயங்கள் திருமறையில் இருந்தே வளர்ந்தன என்று போதிப்பவர்களின் புரட்டை (பார்க்க, திருமறையா? திராவிட சமயமா?) இன்று பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இங்கே நமக்கு வேதத்தில் தேர்ந்த அறிவுள்ளவர் களுடைய உதவி தேவை. இவ்விதழில் வாசகர்களின் பயன்கருதி தமிழிலே உள்ள நல்ல நூல்களின் பட்டிய லொன்றையும், அவற்றை எங்கே எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்ற விபரத்தையும் தந்துள்ளோம்.

3. நூல்களின் தலைப்பின் கவர்ச்சியை மட்டும் வைத்து அவற்றின் தகுதியை நாம் தீர்மானிக்கக்கூடாது. நூலின் தலைப்பு கவர்ச்சிகரமாக இருக்கலாம், ஆனால் அதன் உள்ளடக்கங்கள் வேதபூர்வமாக அமையாவிட்டால் அதனால் நமக்கு எந்தப்பிரயோசனமும் இல்லை.

4. நூலாசிரியரைப்பற்றியும், வெளி யீட்டாளரைப்பற்றியும் நாம் அறிந் திருத்தல் அவசியம். ஒரு நூலாசிரியர் பிரபலமானவரா என்பதல்ல நமக்கு முக்கியம். அவர் எதை விசுவா சிக்கிறார்? தான் விசுவாசிக்கும் உண்மைகளை ஒளிவு மறைவின்றித் தெளிவாக விளக்குகின்றாரா? என்பதே முக்கியம். அநேக நூலாசிரியர்கள் தாம் எதை விசுவாசிக்கிறோம் என்று வெளிப் படையாகத் தெரிவிக்க விரும்பு வதில்லை. குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோல் எல்லா வாசகா களையும் திருப்திப்படுத்தும் நோக்கத் துடன் மட்டும் எழுதுபவர்கள் அநேகர். அத்தோடு நூலை யார் வெளியிட்டுள் ளார்கள் என்றும் கவனிக்க வேண்டும். இன்று 'ஜெகோவாஸ் விட்னஸஸ்', 'மோர்மன்ஸ்' போன்ற இயக்கத் தாருடையதும், 'லிபரல்' கொள்கை களைப் பின்பற்றுபவர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களும் வெளி யிடும் அநேக நூல்கள் கிறிஸ்தவப் புத்தகக் கடைகளை அலங்கரிக்கின்றன. ஆகவே ஆசிரியர்களைப்பற்றியும், வெளியீட்டாளர்களைப்பற்றியும் நாம் அறிந்திருப்பது அவசியம்.

## நூல் அறிமுகம்: *பிறவி அடிமைகள்*

*இந்நூல் சீர்திருத்தவாதியான மார்டின் லூதரால் எழுதப்பட்டு 1525 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 16 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்தவாதத்தை தொடக்கிவைத்த வேதவல்லுனர் லூதர் இந்நூலில் இராஸ்மஸ் என்பவர் மனிதனின் சுயசித்தத்தைக்குறித்து எழுதிய நூலுக்குப் பதில் அளிக்கிறார். மனிதன் தனது சுயசித்தத்தின் வல்லமையால் எவருடைய துணையுமின்றிக் கடவுளை அறிந்து கொள்ள முடியுமென்பது இராஸ்மஸின் வாதம். இது 'போப்' ஹென்றி VIII இன் இதயத்தைக் குளிர வைத்தது. சீர்திருத்தவாதியான லூதர் உறுதியாக வேதத்தின் மூலம் இராஸ்மஸின் வாதங்களை இந்நூலில் தவிடு பொடியாக்குகின்றார். மனிதன் பாவத்திற்கு அடிமையாகவே பிறந்திருக்கிறான், அவன் சுதந்திரமாக செயற்பட இயலாத நிலையிலிருக்கிறான் என்று லூதர் எடுத்துக் காட்டுகிறார். கிளிபோட்டு பாண்டு என்பவரால் லூதரின் மூலத்தைச்சுருக்கி ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட நூலின் தமிழாக்கம் 'பிறவி அடிமைகள்'. இதன் விலை: ரூ 9.00. முகவரி: தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள், 4. கெல்லீஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை 600 010.*

*இப்பத்திரிகையின் மேலதிக பிரதிகள் தேவையானோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதனை ஏனையோருக்கும் அறிமுகப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

**Bible Lamp**
**P.O.Box 62-159**
**Sylvia Park**
**Auckland**
**New Zealand**

# கிருபையின் போதனைகள் என்றால் என்ன?

**4**

வரலாறும் வேத சத்தியங்களும் ஒன்றோடொன்று இணைந்தவை. கர்த்தர் வரலாற்றின் தேவனாக இருப்பதோடு அவ்வரலாற்றின் மத்தியிலேயே தன்னைப்பற்றிய சத்தியங்களை வெளிப்படுத்தினார். ஆகவே வரலாற்றில் சத்தியத்திற்கு எதிராக எழுந்த போலிப்போதனைகளை அடையாளம் காண்பது சத்தியத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும், அதைக்காப்பதற்கும் உதவும். அந்த அடிப்படையில் தான் இதுவரை பெலேஜியனிசம், செமி-பெலேஜியனிசம் ஆகிய சத்தியத்திற்கெதிரான போலிப் போதனைகளைக் குறித்துப் பார்த்தோம். வரலாற்றையோ வரலாறு சந்தித்த சத்தியத்திற்கெதிரான எதிர்ப்புகளையோ நாம் நிராகரித்து விட முடியாது. இவ்விதழில், திருச்சபையினால் தூக்கியெறியப்பட்ட இப்போதனைகள் பல நூறு ஆண்டுகளுக்குப்பின் மறுபடியும் எவ்வாறு மறுரூபம் அடைந்தன, திருச்சபையை ஆட்டிப்படைக்கக் கங்கணம் கட்டின என்று பார்க்கலாம்.

பலநாடுகளிலும் இன்று கிறிஸ்தவ உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் ஒரு போலிப் போதனை 'ஆமீனியனிஸம்'. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்திருத்தவாதியாகிய ஜோன் கல்வினுடைய சீடராகிய 'பீசா' என்பவரின் சீடராக இருந்தவர் ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த யெகோபஸ் ஆமீனியன். சீர்திருத்தவாதத்தின் மூலம் எழுந்த போதனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்த ஆமீனியஸ் அதற்கு எதிரான போதனைகளை ஒல்லாந்து நாட்டில் பரப்பத் தொடங்கினார். ஆமீனியஸ் இறந்த ஒரு வருடத்திற்குப்பின்பு 1610 ஆம் ஆண்டில் அவரது சீடர்கள் ஆமீனியனுடைய போதனைகளை விசுவாச அறிக்கையாக வெளியிட்டனர். ஐந்து கோட்பாடுகளைக் கொண்ட இவ்வறிக்கையை அவர்கள் ஒல்லாந்து அரசிடம் சமர்ப்பித்தனர். இதன் மூலம் இவர்கள் 'பெல்ஜிக்' விசுவாச அறிக்கையிலும், 'ஹெயிடில் பேர்க்' வினாவிடைத் திருமறைக் கல்வியிலும் போதிக்கப்பட்ட, ஒல்லாந்து திருச்சபையின் போதனைகளை உறுதிப்படுத்தினர்.

இவர்கள் கொண்டு வந்த ஐந்து கோட்பாடுகளாவது:

"1. ஒருவன் தன்னை விசுவாசிப்பானா அல்லது நிராகரிப்பானா என்பதை ஏற்கனவே அறிந்திருக்கும் அறிவைக் கொண்டே கடவுள் ஒருவனைத் தெரிவு செய்கிறார் அல்லது நிராகரிக்கிறார்.

2. விசுவாசிகள் மட்டுமே இரட்சிக்கப்பட்டாலும் இயேசு கிறிஸ்து எல்லோருக்காகவும், ஒவ்வொரு மனிதனுக்காகவுமே மரித்தார்.

3. மனிதன் பாவியாதலால் அவன் விசுவாசிப்பதற்கும், நீதியானவற்றைச் செய்வதற்கும் தெய்வீகக் கிருபையானது அவசியமாக இருக்கின்றது.

4. இத்தெய்வீகக் கிருபையை மனிதனால் நிராகரித்துவிட முடியும்.

5. மறுபிறப்படைந்த அனைவருமே தங்களுடைய விசுவாச வாழ்க்கையில் தொடர்ந்திருப்பார்கள் என்ற கூற்று மேலும் ஆராயப்பட வேண்டும்.

கடைசிக் கோட்பாடு பின்பு திருத்தப்பட்டு ஒரு விசுவாசி தனது விசுவாசத்தை இழந்து இரட்சிப்பையும் இழந்து போகலாம் என்று மாற்றப்பட்டது. ஆமீனியனுடைய கொள்கையைப் பின்பற்றுகிற அனைவருமே இந்தக் கடைசிக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களில் சிலர் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அதை ஒருபோதுமே இழந்து போக மாட்டார்கள் என்று விசுவாசிக்கிறார்கள்.


ஒல்லாந்து அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தேசிய சமயக்குழு 1618 ஆம் ஆண்டு நவம்பர் 13 இல் 'டோர்ட்' என்ற இடத்தில் கூடி இவ்வைந்து கோட்பாடுகளையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்தது. மனிதன் பாவத்தால் பாதிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொண்டாலும், அவன் இரட்சிக்கப் படுவதற்கு கடவுளுடைய கிருபை மட்டும் போதாது அவனது சுய தீர்மானமும் அவசியம் என்ற செமி-பெலேஜியனிஸமே மறுபிறவி எடுத்திருப்பதை இக்குழு உணர்ந்தது. பல நாடுகளையும் சேர்ந்த 84 பேர் இக்குழுவில் அங்கத்தவர்களாக இருந்தனர். ஏழு மாதங்கள்வரை 154 தடவைகள் கூடிய இக்குழு தனது இறுதிக் கூட்டத்தை 1619 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி நடத்தியது. திருமறையின் அடிப்படையில் ஆமீனியஸின் போதனைகளை ஆராய்ந்த 'டோர்ட் சினட்' அவற்றை வேதத்திற்குப் புறம்பான போதனைகள் என்று தீர்மானித்துக் கண்டனம் செய்து, அதைப்போதித்தவர்களை நாடு கடத்தியது.. அத்தோடு இத்தகைய போலிப் போதனைகளில் இருந்து திருச்சபையைக் காப்பதற்காக இவற்றிற்கெதிரான வேதசத்தியங்களை ஐந்து அதிகாரங்களாக இக்குழு வெளியிட்டது. அவை ஏற்கனவே சீர்திருத்தவாதிகளால் முக்கியமாக பிரான்ஸைச் சேர்ந்த ஜோன் கல்வினால் ***(1509-1564)*** போதிக்கப்பட்டு வந்ததால் 'ஐந்து கல்வினித்துவக் கோட்பாடுகள்' என்ற பெயரையும் பெற்றன. இவையெல்லாம் நிகழ்ந்தபோது கல்வின் உயிரோடு இல்லை.

வேதத்திற்கு முரணானதும், திருச்சபையினால் போலிப்போதனைகள் என்று நிராகரிக்கப்பட்டதுமான ஆமீனியனின் பெயரைத்தாங்கிய 'ஆமீனியனிஸம்' இன்று உலகெங்கும் எல்லா சமயக்குழுக்களிலும் பரவி செல்வாக்குப் பெற்றுள்ளது. பொய்யை உண்மையைப் போலத்தோற்றமளிக்கச் செய்வதில் ஒளியின் தூதனைப்போல் வேஷம் தரிக்கும் சாத்தான் வல்லவன்.

போலிப்போதனையான 'ஆமீனியனிசம்' கிறிஸ்தவர்களை மயக்கிச் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணமென்ன? யார் இதற்குப் பொறுப்பு? ஜோன் வெஸ்லியும் அவர் எற்படுத்திய மெத்தோடிசமும், சார்ள்ஸ் பினியும்தான் இதற்குத் தூபம் போட்டவர்களில் முக்கியமானவர்கள். சார்ள்ஸ் பினி நமக்கிழைத்திருக்கும் பெருந்தீங்கு இன்று அநேகர் கண்களுக்குப் புலப்படுவதில்லை. கடவுளின் கையை மடக்கிக் காரியம் சாதிக்கலாமெனப் போதித்த மனிதத்துவவாதி பினி. ஆமீனியனிஸத்தைப் பின்பற்றிய இவர்களுடைய போதனைகளாலேயே இன்று அநேகர் சத்தியம் தெரியாமல் மயங்கிக் கிடக்கிறார்கள். கிறிஸ்தவ உலகெங்கும் பாசி போல் படர்ந்திருக்கும் பல கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் இப்போதனையின் அடிப்படையிலேயே தங்கள் ஊழியத்தை நடத்தி வருகின்றன. (வளரும்)

**'கிருபையின் போதனைகள்' என்ற சொற்றொடர் பலருக்குப் புதிதாக இருக்கலாம். சிலர் அது குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். மேலும் சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அதில் தெளிவில்லாது இருக்கலாம். இக்கட்டுரை இப்போதனைகளை திருமறையின் அடிப்படையில் சரித்திர பூர்வமாக ஆராய்ந்து அறிமுகப்படுத்துகிறது.**

# தமிழிலே உள்ள சிறந்த கிறிஸ்தவ இலக்கியங்கள்



தமிழில் கிறிஸ்தவ நூல்களுக்கு இன்று குறைவில்லை. புத்தகக்கடைகள் எல்லாம் நிரம்பி வழிகின்றன. ஆனால் அவை எல்லாமே ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் துணைபுரியுமா என்பது சந்தேகமே. தவறான கொள்கைகளைப் பரப்பும் நூல்களே அநேக புத்தகக்கடைகளை அலங்கரிக்கின்றன. யொங்கி சோ, தினகரன், சாம் ஜெபத்துரை போன்றோரின் மோசமான வேத அடிப்படையில் அமையாத நூல்களுக்கு மத்தியில் நல்ல நூல்களும் வெளிவருவது மகிழ்ச்சி தரும் காரியமே. சீர்திருத்தவாத காலத்து அறிஞர்களின் இறவாத் தன்மையுடைய சில இலக்கியங்கள் இன்று தமிழில் வெளிவந்துள்ளன. கல்வின், ஜோன் ஓவன், ப்ளேவல், ஆப்ரகாம் பூத் போன்றோருடையது மட்டுமன்றி, இதே கொள்கைகளைத் தழுவி எழுதிய பின்வந்தவர்களான பின்க், ஸ்பர்ஜன் போன்றோரின் நூல்களும் தமிழில் உள்ளன. நல்ல நூல்கள் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டாலும் இதுவரை வெளிவந்திருப்பவை உன்னதமான எதிர் காலத்தை எடுத்துக்காட்டும் சின்னங்களாக இருக்கின்றன. இந்நூல்களை வாசித்து ஆவிக்குரிய வாழ்வில் ஆசீர்வதிக்கப்பட்ட போதகர்கள், கிறிஸ்தவர்கள் பலரை நாமறிவோம். வாசகர்கள் இன்றே இவற்றைப் பெற்றுப்பயனடையும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

இங்கிலாந்தில் உள்ள 'கிரேஸ் பப்ளிகேசன்ஸ்' என்ற வெளியீட்டு நிறுவனத்தாரே காலத்தால் அழியாத இந்நூல்களை முதலில் சுருக்கமாக ஆங்கிலத்திலும் பின்பு தமிழிலும் மொழி பெயர்த்து வருகின்றனர். சென்னையில் உள்ள தமிழ் பாப்திஸ்து வெளியீட்டு நிறுவனம் இவற்றை வெளியிடுகின்றது. இந்நூல்களின் பட்டியலை இங்கே தந்துள்ளோம். இவற்றைக் கீழ்வரும் முகவரிகளுக்கு எழுதி வாசகர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

*தமிழ் பாப்திஸ்து வெளியீடு*
***4.** கெல்லீஸ் ரோடு,*
*கீழ்பாக்கம்*
*சென்னை - **600 010***

*ஈ. எல். எஸ்*
*95ஏ. வேப்பேரி ஹைஸ்கூல் ரோடு,*
*சென்னை - **600 010***

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு - ஜோன் ஓவன் | ரூ.12.00 |
| கிருபையின் மாட்சி - ஆபிரகாம் பூத் | ரூ. 8.00 |
| கிறிஸ்தவன் யார் - ஈ. ஜே. ஆப்பில்பீ | ரூ. 4.00 |
| ஆளுகிறவர் யார்? ஆர்தர் பின்க் | ரூ. 5.00 |
| கிறிஸ்தவனின் உள்ளான வாழ்க்கை - ஆ. வின்ஸேலோ | ரூ. 5.50 |
| கடவுள் செயலின் இரகசியம் - ஜோன் ப்ளேவல் | ரூ. 4.00 |
| வேத வாசிப்பின் நன்மைகள் - ஆர்தர் பின்க் | ரூ. 4.00 |
| மெய் வாழ்வு - பிலிப்பு டாட்ரிட்ஜ் | ரூ. 2.00 |
| சிறந்த கிறிஸ்தவன் - வில்லியம் லா | ரூ. 5.00 |
| கடவுளை அறிய முடியுமா? - கர்ட் | ரூ. 5.00 |
| கற்கள் பேசுகின்றன - ஏச். ஜே. ஆப்பில்பீ | ரூ. 7.00 |
| பிறவி அடிமைகள் - மார்டின் லூதர் | ரூ. 9.00 |
| பரிசுத்த ஆவியானவர் - ஏச். ஜே. ஆப்பில்பீ | ரூ. 9.00 |
| திருமறையை விளக்கும் முறை - கர்ட் | ரூ 4.00 |
| ஸ்பர்ஜன் அறிவுரைகள் | ரூ.20.00 |
| ஸ்பர்ஜன் பிரசங்கங்கள் | ரூ.11.00 |
| சீர்திருத்த திருச்சபையின் கொள்கைகள் - ஜோன் கல்வின் | ரூ.13.00 |

**குழந்தைகளுக்கு**

| | |
|---|---|
| ஞானத்தில் வளர்ச்சி - சூசன் ஹார்டிங் | ரூ.10.00 |

**விளக்கவுரைகள்**

| | |
|---|---|
| ஆதியாகமம் - ஏச். ஜே. ஆப்பில்பீ | ரூ.18.00 |
| யோசுவா - ரே. போட்டர் | ரூ. 7.00 |
| எபேசியர் - பீட்டர் நைலோ | ரூ.13.00 |
| ஓசியா - மீகா - டி. ஏ. துரோவர் | ரூ.12.00 |
| நாகூம் - மல்கியா - டி. ஏ. துரோவர் | ரூ.11.00 |

**வேத ஆய்வு நூல்கள்**


| | |
|---|---|
| வேதாகம சொல் அகராதி | ரூ.33.00 |
| தமிழ் வேதாகம ஒத்த வாக்கிய அகராதி - டி. ஏ. துரோவர் | ரூ.55.00 |

# சபைக்கொரு நூலகம்

வாசிக்க மறுப்பவர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள் என்பது நாமறிந்த உண்மை. 16 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதம் தோன்றுவதற்கு முன்பாக கத்தோலிக்க சபை, மக்கள் சுயமாகச் சிந்திப்பதைத் தடை செய்திருந்தது. வேதத்தை வாசித்து சுயமாக விளங்கிக் கொள்வது அக்காலத்தில் ஆபத்தான காரியமாக இருந்தது. அத்தகைய ஆபத்திலிருந்து கடவுள் நமக்கு விடுதலை தந்திருக்கிறார். அச்சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் கிறிஸ்தவர்கள் சிந்திக்கப் பழக வேண்டும். அதற்கு சபைப்போதகர்கள் துணை செய்ய வேண்டும். சபை மக்கள் வாசிப்பதற்கு உதவிசெய்யும் வகையில் சபைப் போதகர்கள் நல்ல நூல்களை அடிக்கடி தம் மக்களுககு அறிமுகப் படுத்த வேண்டும். சில வேளைகளில் வேத பாட வகுப்புகளிலோ, விசேட வகுப்புகளிலோ ஒரு நல்ல நூலை அதில் கலந்து கொள்கிறவர்களை வாசிக்க வைத்து, அதை முறையாகப் படிக்கலாம்.

சபையில் ஒரு நூலகத்தை ஏற்படுத்துவது இதற்குத் துணை புரியலாம். எத்தனையோ காரியங்களுக்கு பணம் செலவிடும் நாம் ஏன் நல்ல நூல்களுக்குப் பணம் செலவிடக் கூடாது? நல்ல நூல்கள் தமிழில் குறைவாகவே இருக்கும் வேளையில் இருப்பதையாவது நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? திருச்சபைகள் உயிருள்ளவையாக இருக்கவும், நமது மூதாதையர் பெற்றுத்தந்த விடுதலையைப் பாதுகாக்கவும், சபைச் சீர்திருத்தத்தைத் தொடரவும், அக்கோட்பாடுகள் கொள்கைகளைப் போதிக்கும் நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்றை சபையில் ஏற்படுத்தி சபை மக்கள் அவற்றை வாசிக்க நாம் ஊக்கப்படுத்த வேண்டும். இன்றே இதைக் குறித்து சிந்திப்பீர்களா?

# நூல் அறிமுகம்:



## திருச்சபைக் கோட்பாடுகள்

தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்
கிடைக்குமிடம்: 4. கெல்லீஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை 10
விலை: ரூ. 13.00

திருச்சபை இவ்வுலகிற்கு அளித்துள்ள சிறப்பான சான்றோர்களில் ஒருவர் ஜோன் கல்வின். பதினான்காம் வயதில் கல்லூரிப் படிப்பை ஆரம்பித்துப் பின்பு வக்கீல் படிப்பிற்காக பிரான்ஸை நோக்கிச் சென்று கொண்டிருந்த கல்வினை வழியில் நிறுத்தி பெரல் மூலமாகக் கிறிஸ்தவ ஊழியத்திற்கு கர்த்தர் அழைத்தார். அன்று முதல் தேவ சேவையையே தன் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டு கல்வின் ஜெனீவாவில் ஊழியத்தைத் தொடங்கினார். மகாத் திறமையுடன், அறிவிலும், கல்வியிலும் சிறந்து விளங்கினார். பிரான்ஸ் நாட்டில் சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றிய தற்காகப் பல துன்பங்களை அனுபவித்த தன் சக சகோதரர் களின் நிலையைக் கண்டு வருந்தி, பிரான்ஸ் மன்னனுக்கு கிறிஸ்தவத்தைப் பற்றிய விளக்கத்தை அளித்து கர்த்தரை வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் 'கிறிஸ்தவக் கோட்பாடுகள்' என்ற நூலைக் கல்வின் எழுதினார். இதன் முதல் பதிப்பு 1536 ஆம் ஆண்டில் ஆறு அதிகாரங்களுடன் 520 பக்கங்களுடன் வெளி வந்தது. பின்பு மேலும் அதிக பக்கங்களுடன் பல பதிப்புகளாக வெளிவந்து இறுதியாக என்பது அதிகாரங்களைக் கொண்ட நூலாக வெளிவந்தது.

ஜே. ஐ. பெக்கர் என்ற வேதவல்லுனர் இந்நூலைப் பற்றிக் கூறும்போது, "என் மேசையில் இருக்கும் இந்நூலை நாற்பது வருடங்களாக நான் தொடர்ந்து படிக்கிறேன். இன்னும் இதன் கரைகாண முடியாமலிருக்கிறேன்" என்றார். இந்நூலின் மகிமையை இது எடுத்துக் காட்டுகிறது. திருமறை போதிக்கும் கிறிஸ்தவத்தின் எல்லா அம்சங்களையும் ஒன்று விடாமல் தெட்டத்தெளிவாக, வேத அடிப்படையிலும் அதேநேரம், அனுபவ பூர்வமாக கிறிஸ்துவை அறிந்து கொள்ளத் தூண்டும் பக்தி ரசத்தோடும் கல்வின் இந்நூலை வடித்துத் தந்துள்ளார். இதன் சுருக்கமே தமிழில் 'திருச்சபைக் கோட்பாடுகள்' என்ற தலைப்பில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பயன்படும்படியாக வெளிவந்துள்ளது.

## ஸ்பர்ஜன் அறிவுரைகள்

*(Lectures to my Students)*

தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்
கிடைக்குமிடம்: 4. கெல்லீஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை 10
விலை: ரூ. 20.00.

ஸ்பர்ஜனின் மான்பை அறியாதவர்கள் இருக்க முடியாது. திருச்சபையை அலங்கரிக்க எழுப்பப்பட்ட கற்களில் ஒன்றாக திறமையான பிரசங்க வரத்தைக்கொண்டு பல்லாயிரக் கணக்கானவர்கள் மத்தியில் இங்கிலாந்தில் ஊழியம் செய்தவர் ஸ்பர்ஜன். பதினாறாம் வயதில் இலண்டனிலுள்ள சபை யொன்றில் போதக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு பலரும் வியக்கும் வண்ணம் பிரசங்கித்தவர் ஸ்பர்ஜன். 'மெட்ரபொலிட் டன் டெபர்னக்கள்' என்ற சபையில் போதகராக இருந்தோடு இறையியல் கல்லூரி ஒன்றையும் ஆரம்பித்து அநேகரைத் தன் வாழ்நாளில் ஊழியத்திற்குத் தயார் செய்தார். போதக ஊழியத்திற்கு அழைக்கப்படுகிறவர்களுக்கு உதவும் பொருட்டு அவ்வூழியத்தின் எல்லா அம்சங்களையும் விளக்கும் அற்புதமான நூலொன்றையும் ஸ்பர்ஜன் வெளியிட்டார். அந்நூலின் ஆங்கில மூலத்தின் தமிழாக்கமே 'ஸ்பர்ஜன் அறிவுரைகள்'.

திருச்சபையில் போதகர்களாக ஊழியம் செய்பவர்களும், அவ்வூழியத்திற்காகத் தம்மைத் தயார் செய்பவர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது. தமிழில் இத்தகைய நூல் ஒன்று இல்லாத குறையை இதன் வெளியீட்டாளர்கள் தீர்த்து வைத் துள்ளனர். போதக ஊழியத்திற்கு வருகின்ற எவரும் தமது முதல் வருட ஊழியத்தைத் தொடங்கும்போது இந்நூலைக் குறைந்தது மூன்று முறையாவது கவனத்தோடும் அக்கறையோடும் படிப்பது நிச்சயம் அவசியம். போதக ஊழியத்திற்கு பல இடங்களில் இன்று ஏற்பட்டுள்ள அவல நிலையை நாம் போக்க வேண்டு மானால் அதன் ஆரம்ப நடவடிக்கையாக எல்லாத் திருச்சபைப் போதகர்களுக்கும் இதைக்கட்டாய பாடமாக்க வேண்டியது அவசியம். ஒருவன் நல்ல போதகனாக அமைவதற்கு ஆவியானவரே காரணகர்த்தாவாக இருந்தபோதும், ஸ்பர்ஜனின் அறிவுரைகள் அத்தகைய மனிதனை மேலும் பயனுள்ளவனாக மாற்றக்கூடிய அறிவுரைகளை அள்ளித் தருகின்றது. தாழ்மை உணர்வும், தெய்வபக்தியும் கொண்டு, தேவ மந்தையைக் கருத்தோடு வழிநடத்திச் செல்வதில் நாட்டமுள்ள எவரும் இதை வாசிக்காமல் இருக்க முடியாது. போதகர்களும், போதக ஊழியத்திற்குத் தம்மைத் தயார் செய்து கொண்டிருப்பவர்களும் இந்நூலை இன்றே பெற்று வாசிக்க முயல வேண்டும்.

# ஆசிரியரெழுதிய சில நூல்கள்

## 1. திருமறை (20 பக்கங்கள்)


திருமறையின் அதிகாரத்திற்கு பலரும் உட்பட மறுக்கும் இக்காலத்தில், நாம் விசுவாசிக்க வேண்டிய அதன் அதிகாரத்தை யும், போதுமான தன்மையையும் இந்நூல் விளக்குகிறது.

## 2. ஆன்மீகக் குழப்பம் (20 பக்கங்கள்)

இன்று சுற்றிவரக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பார்ப்பது எழுப்புதலா? இல்லை ஆன்மீகக் குழப்பமா? என்பதை வேத பூர்வமாக ஆராய்கின்றது இந்நூல்.

## 3. திருமறையா? திராவிட சமயமா? (28 பக்கங்கள்)

கிறிஸ்தவத்திலிருந்துதான் ஆதித்திராவிட சமயங்கள் தோன்றின என்ற தவறான போதனையைப் பரப்பி வருபவர்களின் வாதங்களைத் திருமறையின் அடிப்படையில் ஆராய்கிறது இந்நூல்.




தமிழ்நாட்டில்:
Bible Lamp,
'Atman Illam',
73. Yercaud Main Rd,
Salem 636008
(Rs. 5.00 each including postage)

ஸ்ரீ லங்காவில்:
T. B. Surendren
19. Rajasinghe Rd,
Colombo 6
(Rs. 10.00 each including postage)